

நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி, தேவசாஸ்த்ரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் கா.ராமச்சந்திரன் 'மக்களுடன் முதல்வர்' முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.கீர்த்தி பிரியதர்சினி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டம் பாளையம் புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 2–ம் கட்டமாக ஊரகப் பகுதிகளில் "மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கே.ஜி.கண்டிகை ஊராட்சியில் 2–ம் கட்டமாக நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமில் அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி முகாமைப் பார்வையிட்டார். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி மரு.என்.ஓ.சுகபுத்ரா, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன், ராணிப்பேட்டை மாவட்ட அவைத் தலைவர் அசோகன், ஒன்றிய கழகச் செயலாளர்கள்ஆர்த்தி ரவி, பெ.பழனி உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இலட்சியவாதிகளின் மகத்துவம் உணர்ந்தவர்!

# விருது பெற்ற படைப்பாளர்களுக்கு 'கனவு இல்லம்' வழங்கி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!



சென்னை, ஜூலை 13-

2022-ஆம் ஆண்டில் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்கும் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்...

உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்"

என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்து அகிலமெங்கும் உள்ள தமிழர்களுக்கு கலங்கரை விளக்காய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளினை வரும் ஆண்டிலிருந்து செம்மொழி நாளாக சட்டமன்றப் பேரவையில் அறிவிக்க வாய்ப்புத் தந்த ஆட்சிக் காலம் இலக்கியத்தின் நிலைக்களனாகவும் அமுதத்தமிழ் ஊற்றாகவும் திகழ்ந்து வருகிறது.

உலகில் வாழும் ஒரு மனிதன் செம்மாந்த வாழ்வு வாழ வேண்டுமெனில் திருக்குறள் என்னும் ஒற்றை இலக்கியத்தைப் படித்தார்களென்றால் அதுவே போதுமானது...

இனம், மொழி, மதம், சூழல் என எதுவும் தடையில்லை திருக்குறளைப் பயில்வதற்கு... திருக்குறள் வழி நடப்பதற்கு... அத்தகையதொரு ஒப்பற்ற இலக்கியத்தினை உலகில் வேறு எந்த மொழியிலும் காண இயலாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படைத்த குறளோவியத்தைப் பல முறை படிக்கின்ற வாய்ப்பு இளமையிலிருந்தே எனக்கு இயல்பாகக் கிட்டியது. ஒவ்வொரு திருக்குறளுக்கும் நடப்பியல் கதையோடு எழுதியுள்ள பாங்கே அருமையான விளக்கமாகும்.

என்னுடைய வாழ்வின் பெருமை எது என்றால் முத்தமிழறிஞர் கலைஞர் வடித்தெடுத்த வள்ளுவர் கோட்டம் முதலமைச்சர் தளபதி அவர்களால் புத்தாக்கம் செய்திட ஆணையிடப்பட்டு நடைபெற்று வரும் அரும்பணியில் செய்தித் துறை அமைச்சர் என்ற வகையில் தலைமை தாங்கி ஈடுபட்டுவருவதே ஆகும்.

இலக்கியத்தைத் தனது ஆயுதமாகக் கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வழி வந்த நம் முதலமைச்சர் தளபதி அவர்கள் இலக்கியத்தின் அருமையையும் இலக்கியவாதிகளின் பெருமையையும் உணர்ந்தவர்.

இலக்கியவாதிகளின் மகத்துவம் உணர்ந்தே நம் தமிழ்நாட்டின் வீதிகள் தோறும், ஊர்கள்தோறும், மாவட்டங்கள்தோறும் என இலக்கிய நிகழ்வுகள் இடைவிடாது நடந்தேறிட வேண்டும் என்ற முனைப்போடு ஞானபீட, சாகித்ய அகாதமி, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி விருது பெற்ற படைப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பெருமக்களே, கழக அரசு ஆட்சி காலத்தின் மாபெரும் சிறப்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2011ஆம் ஆண்டில் சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் நூலாசிரியருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 20,000/-லிருந்து ரூபாய் 30,000/-ஆகவும் பதிப்பாளருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 5,000/-லிருந்து ரூபாய் 10,000/-ஆகவும் உயர்த்தப்பட்டது. 13 ஆண்டுகள் கழித்து நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,நூலாசிரியருக்கான பரிசுத் தொகை ரூபாய் 30,000/-லிருந்து ரூபாய் 50,000/-ஆகவும் பதிப்பாளருக்கான பரிசுத் தொகை ரூபாய் 10,000/-லிருந்து ரூபாய் 25,000/-ஆகவும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு 2023ஆம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்படும் நூல்களுக்கு நடைமுறைபடுத்தப்படும் என்பதை மீண்டும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தின் அருமையை இளம் தலைமுறையினருக்கு உணர்த்துவோம்... நல்ல நல்ல நூல்களைத் தெரிவு செய்து வாசிப்போம்... படைப்பாளர்களைப் போற்றுவோம்... என்று கூறிப் பரிசு பெறும் அனைவரையும் வாழ்த்தி அமைகிறேன்...

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.

### இரு மாதங்களுக்கு ஒருமுறை

# கூட்டுறவுப் பணியாளர் குறை தீர்க்கும் நாள் நடத்தப்படும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



சென்னை, ஜூலை 13-

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குறைகளை தீர்வு செய்திடும் வகையில் இரு மாதங்களுக்கு ஒருமுறை இரண்டாவது வெள்ளிக்கிழமை மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, 27.6.2024 அன்று நடைபெற்ற கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பு எண்:3ல் "கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குறைகளை தீர்வு செய்திடும் வகையில் இரு மாதங்களுக்கு ஒருமுறை மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும்" என்ற அறிவிப்பு என்னால் வெளியிடப்பட்டது.

மேற்படி அறிவிப்பினை செயல்படுத்திட, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்துவரும் பணியாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் நிர்வாகத்திற்கு இடையே இனக்கமான சூழலை உருவாக்கி பணியாளர்களுடைய பணித்திறனை மேம்படுத்தி உறுப்பினர்களுக்கு சிறந்த சேவை வழங்கும் பொருட்டும், பணி தொடர்பாகவும், பணியின் போதும் அல்லது வேறு வகையிலும் ஏற்படும் குறைகளை பகிர்ந்திடவும், அக்குறைகளை விதிமுறைகளுக்குட்பட்டு தீர்வு செய்திடும் வகையில் இரு மாதங்களுக்கு ஒரு முறை மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்திட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அனைத்து மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்களுக்கு செயல்முறை ஆணை அனுப்பட்டுள்ளது.

அவ்வாணையில், இரு மாதங்களுக்கு ஒரு முறை இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று பணியாளர் நாள் நிகழ்வினை நடத்தவும், அவ்வாறு இராண்டாவது வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாக இருந்தாலோ அல்லது வேறு காரணங்களினால் நடத்த இயலாது சூழல் ஏற்பட்டாலோ அடுத்து வரும் வேலை நாளில் அக்கூட்டத்தினை நடத்திடவும், பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும் இடம் அனைத்து பணியாளர்களும் அமரும் வகையில் உரிய அடிப்படை வசதிகள் நிறைந்த இடத்தில் நடத்திடவும், பணியாளர் நிகழ்வு நடைபெறும் விவரத்தினை அனைத்து பணியாளர்களுக்கும் முன்னரே தெரிவித்து கலந்துகொள்ளச் செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்பட வேண்டிய தேதி முறையே 13.09.2024, 08.11.2024, 10.01.2025 மற்றும் 14.03.2025 என அட்டவணை விவரமும் அனுப்பப் பட்டுள்ளது.

மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் சுழற்சி முறையில் கூட்டத்தினை நடத்திடவும், ஒரு மண்டலத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளும் போது, வேறு மண்டலத்திற்கு, மேற்படி பணியாளர் நாள் நிகழ்வில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர் / பொது மேலாளர் / உதவி பொது மேலாளர் கலந்து கொள்ள வேண்டும் எனவும், பணியாளர் குறைகள் தொடர்பாக பெறப்படும் மனுக்களை அதற்காக உருவாக்கப்பட்ட இணையதளத்தில் பதிவிட வேண்டும், இணையதளத்தில் பதிவிட முடியாத மனுக்களை பணியாளர் நிகழ்வின் போது அளிக்கலாம் எனவும், அதற்கான கணினி மற்றும் இணையதள வசதிகளை பணியாளர் நாள் அன்று ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவ்வாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர் நாள் அன்று பெறப்பட்ட மனுக்கள், தீர்வு செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய மனுக்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு, கூட்டத் தீர்மானம் பதிவேட்டில் பதியப்பட வேண்டும் எனவும், கூட்டத் தீர்மானத்தில் மண்டல இணைப்பதிவாளர் மற்றும் வங்கியின் மேலாண்மை இயக்குநர், மேலாண்மை இயக்குநர் இல்லாத நிகழ்வில், கூட்டத்தில் வங்கியின் சார்பாக கலந்து கொள்ளும் அலுவலர் கையொப்பமிட வேண்டும் எனவும், பெறப்பட்ட விண்ணப்பங்கள் இரண்டு மாதங்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும் எனவும், நிராகரிக்கப்படும் மனுக்கள் எந்த காரணத்திற்காக நிராகரிக்கப்படுகிறது என்பதையும் தெளிவாக குறிப்பிட்டு மனுதாரர்களுக்கு பதில் அனுப்பி அவ்விவரங்கள் இணையதளத்தில் பதிவிட வேண்டும் என்ற அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.




ஊரகப்பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வை பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சிக்குட்பட்ட ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மக்களோடு அமர்ந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரலையில் நிகழ்ச்சியை பார்த்து பின்னர், மக்களுடன் முதல்வர் முகாமை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.கற்பகம்,பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ச.ஷ்யாம்ளா தேவி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர் திட்டத்தை நேற்று முன்தினம் (11.07.2024) தொடங்கி வைத்ததை தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மொன்னையம்பட்டி ஊராட்சியில் உள்ள புனித அந்தோணியார் தொடக்கப்பள்ளி வளாகத்தில் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப் இ.ஆ.ப, தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.கல்யாணசுந்தரம் ஆகியோர் மக்களுடன் முதல்வர் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி. நீலமேகம், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.




நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கும் நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 2,220 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.2.83 கோடி மதிப்பில் கையடக்கக் கணினிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத்தலைவர் செ.பூபதி, முதன்மைக் கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) எ.பாலசுப்ரமணியன் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.